# அதியமான்

... ஒன்று சேர்...

athiyamanteam.com

TNPSC, TNUSRB
TNFUSRC, RRB

# இந்தியாவின் வரலாறும் பண்பாடும்

ஆறாம் வகுப்பு முதல்
பன்னிரண்டாம் வகுப்பு வரை

# SCERT

*புதிய பாடத் திட்டம் மற்றும் சமச்சீர் புத்தகத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது*

**ஒன்று சேர் பதிப்பகம்**

# பதிப்புரை

போட்டித் தேர்விற்கு கொடுக்கப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின் படி, புதிய சமச்சீர் புத்தகங்களில் நீங்கள் படிக்க வேண்டிய பாடங்கள் அனைத்தும் அதியமான் குழுமத்தால் (Athiyaman Team) தொகுக்கப்பட்டு இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

போட்டித் தேர்வை பொருத்தவரை சமச்சீர் புத்தகங்களே மிக முக்கியமானவை. அவற்றில் இருந்து மிக அதிகமான வினாக்கள் தேர்விற்கு கேட்கப்படும். இந்தியாவின் வரலாறும், பண்பாடும் பகுதிக்கு நீங்கள் படிக்க வேண்டிய அனைத்து தலைப்புகளுக்கும் மொத்தம் 34 பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

நீங்கள் எந்த போட்டித் தேர்விற்கு படித்தாலும் இந்த புத்தகத்தை பயன்படுத்தி படிக்கலாம். தொகுக்கப்பட்டுள்ள பாடங்கள் அனைத்தும், சமச்சீர் புத்தகத்தில் எங்கு உள்ளன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. போட்டித் தேர்வு சம்பந்தமான வீடியோக்கள் அனைத்தையும் Athiyaman Team என்ற எங்களுடைய யூடியூப் சேனலில் நீங்கள் காணலாம்.

வீட்டில் இருந்து போட்டித் தேர்விற்கு தயாராகும் (TNPSC Group 1, 2 & 2A, Group 4 Exams, TNUSRB PC & SI, RRB, TN Forest, EB Assessor Exams) தேர்வர்கள், எங்களுடைய ஆன்லைன் வகுப்பில் இணைந்து கொள்ளலாம். இந்த ஆன்லைன் வகுப்புகளை நீங்கள் உங்களுடைய கணிணி மற்றும் உங்களுடைய கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து பார்த்துக் கொள்ளலாம்.

எங்கிருந்தாலும் எந்த நேரத்திலும் எத்தனை முறை வேண்டுமானாலும் இந்த வகுப்புகளை நீங்கள் காண இயலும். மிக மிக குறைந்த கட்டணத்தில் இந்த வகுப்புகளில் நீங்கள் இணைந்து கொள்ளலாம். இதனை பற்றிய தகவல்கள் athiyamanteam.com என்ற நமது இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் வகுப்பில் இணைய 8681859181 என்ற எண்ணிற்கு நீங்கள் தொடர்பு கொள்ளலாம். ஆன்லைன் தேர்வுகள் அனைத்தும் Athiyaman Team என்ற ஆன்ட்ராய்டு செயலியில் கொடுக்கப்பட்டிருக்கும். நீங்கள் எந்த தேர்விற்கு தயாராகி வருகிறீர்களோ அந்த தேர்விற்கான ஆன்லைன் வகுப்பு அல்லது ஆன்லைன் தேர்வில் இணைந்து கொள்ளலாம். நீங்கள் விரும்பும் நேரத்தில் படிக்கலாம். நீங்கள் விரும்பும் நேரத்தில் தேர்வு எழுதலாம்.

வீட்டிலிருந்து படித்து நிச்சயம் தேர்வில் வெற்றி பெற முடியும். உங்களுக்கான ஒரு அட்டவணையை உருவாக்கி தினசரி படித்து வாருங்கள். உழைத்தால் மட்டுமே வெற்றி பெற முடியும். நீங்கள் தொடர்ந்து படித்தால் நிச்சயம் அரசு அதிகாரியாக மக்களுக்கு சேவை செய்ய முடியும்.

உங்களுடைய வலி, தோல்வி, அவமானங்கள், காயங்கள், பிரச்சனைகள் இன்னும் எண்ணற்ற கண்ணீருக்கு காரணமான பலவற்றிற்கு ஒரே தீர்வு உங்களுடைய கல்வி மட்டுமே.

கற்றலே தவம்! ஆற்றலே வரம்!!

நன்றியுடன்

அதியமான் குழுமம்

தொடர்புக்கு: 8681859181

இணையதளம்: athiyamanteam.com

மின்னஞ்சல்: askathiyaman@gmail.com

ஆன்ட்ராய்டு செயலி : Athiyaman Team

# பொருளடக்கம்


| அலகு | பாடத் தலைப்புகள் | Source Book | பக்கம் |
|---|---|---|---|
| | **வரலாறு அடிப்படை தகவல்கள்** | | |
| பாடம் 1 | வரலாறு என்றால் என்ன? | 6th Term 1 | 1 |
| பாடம் 2 | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 6th Term 1 | 5 |
| பாடம் 3 | மனித பரிணாம வளர்ச்சி சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம் | 9th Std | 14 |
| **அலகு 1** | **சிந்துவெளி நாகரிகம்** | | |
| பாடம் 1 | சிந்துவெளி நாகரிகம் ** | 6th Term 1 | 21 |
| பாடம் 2 | சிந்துவெளி நாகரிகம் | 9th Std | 34 |
| பாடம் 3 | சிந்து நாகரிகம் ** | 11th Std | 40 |
| பாடம் 4 | சிந்துவெளி நாகரிகம் | 11th Ethics | 46 |
| **அலகு 2** | **குப்தர்கள்** | | |
| பாடம் 5 | பேரரசுகளின் காலம் - குப்தர் ** | 6th Term 3 | 59 |
| பாடம் 6 | குப்தர் ** | 11th Std | 67 |
| **அலகு 3** | **டெல்லி சுல்தான்கள்** | | |
| பாடம் 7 | டெல்லி சுல்தானியம்** | 7th Term 1 | 81 |
| பாடம் 8 | அரேபியர், துருக்கியர் வருகை** | 11th Std | 90 |
| **அலகு 4** | **முகலாயர்கள்** | | |
| பாடம் 9 | முகலாயப் பேரரசு ** | 7th Term 2 | 110 |
| பாடம் 10 | முகலாயப் பேரரசு ** | 11th Std | 123 |
| **அலகு 5** | **மராத்தியர்கள்** | | |
| பாடம் 11 | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி ** | 7th Term 2 | 147 |
| பாடம் 12 | மராத்தியர் ** | 11th Std | 157 |
| **அலகு 6** | **விஜயநகர மற்றும் பாமினி அரசுகள்** | | |
| பாடம் 13 | விஜயநகர, பாமினி அரசுகள் ** | 7th Term 2 | 174 |
| பாடம் 14 | பாமினி, விஜயநகர அரசுகள் ** | 11th Std | 186 |
| **அலகு 7** | **தென் இந்திய வரலாறு / தமிழ் மக்களின் புராதாணம்** | | |
| பாடம் 15 | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 6th Term 1 | 199 |


athiyamanteam.com

| அலகு | பாடத் தலைப்புகள் | Source Book | பக்கம் |
|---|---|---|---|
| பாடம் 16 | பண்டைகால தமிழகத்தின் சமூகமும், பண்பாடும் - சங்ககாலம் ** | 6th Term 3 | 204 |
| பாடம் 17 | தென்னிந்திய அரசுகள் ** | 6th Term 3 | 214 |
| பாடம் 18 | தென்னிந்திய புதிய அரசுகள் பிற்கால சோழர்களும்,பாண்டியர்களும்** | 7th Term 1 | 225 |
| பாடம் 19 | தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி | 8th Old | 236 |
| பாடம் 20 | தஞ்சாவூரில் மராத்தியர் ஆட்சி | 8th Old | 242 |
| பாடம் 21 | இடைக்கால இந்தியாவில் அரசும், சமூகமும் சோழர்கள் முதல் முகலாயர்கள் வரை ** | 9th Book | 247 |
| பாடம் 22 | தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்** | 11th Std | 259 |
| பாடம் 23 | தமிழக அரசாட்சிகள், வாணிகம் | 11th Std | 271 |
| பாடம் 24 | தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி ** | 11th Std | 276 |
| பாடம் 25 | பிற்கால சோழர்களும், பாண்டியர்களும் ** | 11th Std | 294 |
| **அலகு 8** | **இந்திய சமூகப் பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும், தொடர்ச்சியும்** | | |
| பாடம் 26 | வட இந்தியாவில் வேத கால பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்கால பண்பாடும் | 6th Term 2 | 313 |
| பாடம் 27 | இடைக்கால இந்தியா வரலாற்று ஆதாரங்கள் | 7th Term 1 | 324 |
| பாடம் 28 | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 7th Term 3 | 331 |
| பாடம் 29 | இந்திய பண்பாட்டிற்கு பேரரசுகளின் கொடை ** | 12th Ethics | 339 |
| பாடம் 30 | உலகிற்கு இந்திய பண்பாட்டின் கொடை | 12th Ethics | 396 |
| **அலகு 9** | **இந்திய பண்பாட்டின் இயல்புகள்** | | |
| பாடம் 31 | இந்திய பண்பாட்டின் இயல்புகள் | 12th Ethics | 409 |
| **அலகு 10** | **வேற்றுமையில் ஒற்றுமை, இனம், மொழி, வழக்காறு, இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம்** | | |
| பாடம் 32 | வேற்றுமையில் ஒற்றுமை | 12th Ethics | 424 |
| **அலகு 11** | **தமிழ்நாட்டில் கலையும், சமயமும்** | | |
| பாடம் 33 | தமிழ்நாட்டில் கலையும் கட்டிட கலையும் | 7th Term 3 | 438 |
| பாடம் 34 | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 7th Term 3 | 447 |



athiyamanteam.com

### சூரியன் மற்றும் நெருப்பு வழிபாடு

சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் சூரியன், பாம்பு உருவங்கள் காணப்படுகின்றன. ஆகவே, இவர்கள் சூரியனையும் நெருப்பையும் கடவுளாகக் கருதிவழிபட்டனர் எனலாம். இன்றும், தமிழகத்தில் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலை அக்னித்தலமாகவும்(நெருப்பு), சிவனின் வடிவமாகவும் வணங்கப்படுகிறது. மேலும், சிந்துவெளி மக்களிடையே காணப்படும் பாம்பு வழிபாடு, லிங்க வழிபாடு போன்றவை தமிழகப் பண்பாட்டோடு பொருந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கலைகள்

சிந்துவெளி மக்கள் நுண்கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் பயன்படுத்திய முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், பானைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், சுடுமண் பொம்மைகள், அணிகலன்கள், வெண்கலத்தாலான நடனப்பெண்ணின் உருவம், யோகி சிற்பம் ஆகியவை சிந்துவெளி மக்களின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.



**நடன மாதுவின் சிலை**

### எழுத்துகள்


சிந்துவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள 'சித்திர எழுத்துகள்' சிந்துவெளி மக்களின் மொழிக்குரிய எழுத்துகளாகும். இந்த எழுத்துகள் இடமிருந்து வலமாக ஒரு வரியும், வலமிருந்து இடமாக மற்றொரு வரியாகவும் எழுதப்பட்டுள்ளன. தமிழகத்தின் கீழ்வாலை, குளிர்சுனை, புறக்கல், ஆலம்பாடி, செத்தவாரை, நேகனூர்பட்டி ஆகிய இடங்களில் காணப்படும் எழுத்துகள், சிந்துவெளியிலுள்ள எழுத்துகளோடு தொடர்புடைய தொல்தமிழ் எழுத்துகளாகும். வடபிராமி எழுத்துகளும், தென்பிராமி எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து வளர்ச்சி பெற்றவையாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

**சிந்துவெளி எழுத்துக்கள்**

சிந்துவெளி நாகரிக மக்களின் பேச்சு மொழி, எழுத்துக்கள் தொடர்பாக இன்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிந்துவெளி எழுத்துக்களுக்கும், திராவிட எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ஹீராசு பாதிரியார், ஐராவதம் மகாதேவன், பாலகிருஷ்ணன் போன்ற வரலாற்றாய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தென்பிராமி எழுத்துகள், சிந்துவெளி எழுத்துகளிலிருந்து திராவிடரால் வளர்க்கப்பட்ட நேரான வளர்ச்சியுடைய எழுத்துகள் ஆகும். அவற்றின் ஒருமைப்பாட்டைத் திருநெல்வேலியில் கிடைத்த மட்பாண்டங்கள் மீதுள்ள எழுத்துக்குறிகளையும், நீலகிரியில் உள்ள கல்வெட்டுகளையும் கொண்டு அறியலாம். சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி, திராவிட மொழி என்பதும், தமிழ் ஒரு தென் திராவிட மொழி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



சிந்துவெளி எழுத்துகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

உலக மொழிகள் எவற்றிலும் இல்லாத சிறப்பு தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. எழுத்துகளின் ஒலிப்பு முறையான ழ,ன,ள,ற,ண ஆகிய எழுத்துகள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்றன.

### முத்திரைகள்

சிந்துவெளி மக்களின் பண்பாட்டில் மிகச் சிறந்த கலைபடைப்புகளாகத் திகழ்வன முத்திரைகளாகும். அகழ்வாராய்ச்சியில், சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை திமிலுடன் இருக்கும் காளை, எருமை, புலி, காண்டாமிருகம், வெள்ளாடு, யானை போன்ற விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகளாகும். பல முத்திரைகள் எழுத்துக்குறியீடுகளைக் கொண்டுள்ளன. ஆகவே, இவை சிந்துவெளி மக்களின் வரலாற்றை அறிய உதவும் இன்றியமையாத சான்றுகளாகத் திகழ்கின்றன.

### சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு

சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு குறித்தும், அதற்கான சான்றுகள் குறித்தும் வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லை. இதுசார்ந்த பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வளவு பெரிய, வளர்ந்த, பண்பட்ட நகர நாகரிகமானது, திடீரென அழிந்திருக்க முடியாது. இருந்தாலும், இது பின்வரும் காரணங்களால் அழிந்திருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர்.



சிந்துவெளி முத்திரைகள்

- சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால், வெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம்.
- அங்குக் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் அடிப்படையில் பார்த்தால் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு அழிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.
- வரலாற்று ஆசிரியர் கிருஷ்ணா ரெட்டி என்பாரின் கூற்றுப்படி ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு நகரங்கள் மிகப்பெரிய வணிகத்தலங்களாக இருந்துள்ளன. இங்குப் பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டு, நகரங்களை விட்டு மக்கள் வெளியேறி இருக்கலாம்.
- சிந்துநதி தன்போக்கை மாற்றிக் கொண்டதால், கடுமையான வறட்சி ஏற்பட்டு மக்கள் அந்நகரங்களிலிருந்து வெளியேறி இருக்கலாம்.
- மொகஞ்சதரோவில் கிடைத்துள்ள மண்டை ஓடுகளில் காணப்பட்டுள்ள வெட்டுக்

காயங்களின் அடிப்படையிலும் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, ஆரியர் படையெடுப்பினால் இந்நாகரிகம் முற்றிலும் அழிந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

### இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை

பழமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம், இந்திய பண்பாட்டிற்குப் பின்வரும் கொடைகளை வழங்கியுள்ளது அவையாவன;

- சிந்துவெளி காலத்தில் தோன்றிய நகரங்களின் வடிவமைப்பு மேம்பட்டதாகவும் மற்ற நகர வடிவமைப்பிற்கு முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளது.
- கட்டடக் கலையில் சுட்ட செங்கற்கள், சுண்ணாம்பைப் பயன்படுத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர்.
- நகரம் மாசடைவதைக் தடுக்க சுண்ணாம்புக் கால்வாய்கள், நகரின் ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டிருந்தன.
- தூய்மை மற்றும் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட்டது.
- கவின்கலைகள் நன்கு ஊக்குவிக்கப்பட்டன.
- சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மொழியே தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த இடங்கள்**

- ஹரப்பா – ராவி நதியோரம் மேற்கு வங்காளம் (தற்போதைய பாகிஸ்தான்)
- மொகஞ்சதாரோ – சிந்து நதியோரம் மேற்கு பஞ்சாப் (தற்போதைய பாகிஸ்தான்)
- ரூபார் – சட்லெஜ் நதியோரம், பஞ்சாப்
- லோத்தல் – சட்லெஜ் நதியோரம், குஜராத்
- காலிபங்கன் – காகர் நதி தென் கரையோரம் இராஜஸ்தான்
- சாகுந்தாரோ – சரஸ்வதி நதியோரம், இராஜஸ்தான்
- தோல்வீரா – கபீர் மாவட்டம், குஜராத்
- கோட்டிஜி – சிந்து மாகாணம்
- பனவாலி – ஹரியானா
- சுர்கோட்டா – குஜராத்

## நிறைவுரை

சிந்துவெளிப் பகுதியில், தொல்லியலாளர்கள் பலர் ஆய்வு மேற்கொண்டிருந்த போதிலும் சர். ஜான் மார்ஷல் அவர்கள் மேற்கொண்ட அகழாய்வில்தான் இந்நாகரிகம் பற்றிய முழுமையான விவரங்கள் உலகிற்குத் தெரியவந்தன. இந்நாகரிகம் தமிழர்களின் நாகரிகமே என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் உணர முடிகிறது. தற்கால நகர அமைப்பிற்கு, இந்நாகரிகம் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது. நீச்சல்குளம், தானியக்களஞ்சியம், பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றின் வாயிலாகச் சிந்துவெளி மக்கள் கட்டடக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், இவர்கள் பலநாடுகளுடன் வாணிகத் தொடர்புகொண்டிருந்தமைபெருமைக்குரியதாகும். இவர்கள், இறந்த உடல்களை எவ்வாறு அடக்கம் செய்தார்கள் என்பதையும் சான்றுகளுடன் காண முடிகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**லோத்தல்**

குஜராத்திலுள்ள அகமதாபாத் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது S.R. ராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடம் '**லோத்தல்**' ஆகும். இவ்விடமானது சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்த துறைமுகமாகும். இது உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலமாக எகிப்து, மெசபடோமியா உள்ளிட்ட நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்தன.

பாடம் 5

# பேரரசுகளின் காலம்: குப்தர்

*Ref: 6th Term 3*



## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- குப்த அரச வம்சம் நிறுவப்பட்டதையும், குப்த அரசர்களின் பேரரசு உருவாக்க முயற்சிகளையும் அறிந்துகொள்ளுதல்
- குப்தர் காலத்து அரசு அமைப்பு, சமூகம், பொருளாதாரம் பற்றிய அறிவினைப் பெறுதல்
- கலை, கட்டடக்கலை, இலக்கியம், கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் குப்தர்களின் பங்களிப்பைத் தெரிந்துகொள்ளுதல்
- ஹர்ஷவர்த்தனருடைய ஆட்சியின் முக்கியத்துவத்தை ஆராய்தல்

## அறிமுகம்

கி.பி. (பொ.ஆ) மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவில் குஷாணர்களாலும், தெற்கே சாதவாகனர்களாலும் நிறுவப்பட்டிருந்த வலிமை வாய்ந்த பேரரசுகள் பெருமையையும் வலிமையையும் இழந்தன. இச்சூழல் சந்திரகுப்தரை ஒரு அரசை உருவாக்கித் தனது வம்சத்தின் ஆட்சியை நிறுவ வைத்தது. அவ்வாட்சி இருநூறு ஆண்டுக் காலம் நீடித்தது.

குப்தர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், அதைத் தொடர்ந்து ஏறத்தாழ 50 ஆண்டு இடைபட்ட காலத்திற்குப் பின்னர், வர்த்தன அரச வம்சத்தைச் சேர்ந்த ஹர்ஷர் வட இந்தியாவை கி.பி. (பொ.ஆ) 606 – 647 வரை ஆட்சி புரிந்தார்.

## சான்றுகள்

### தொல்லியல் சான்றுகள்

- குப்த அரசர்களால் வெளியிடப்பட்ட தங்க, வெள்ளி, செப்பு நாணயங்கள்
- சமுத்திரகுப்தரின் அலகாபாத் தூண் கல்வெட்டு
- மெக்ராலி இரும்புத்தூண் கல்வெட்டு
- இரண்டாம் சந்திரகுப்தரின் உதயகிரி குகைக் கல்வெட்டு, மதுரா பாறைக் கல்வெட்டு, சாஞ்சி பாறைக் கல்வெட்டு.
- ஸ்கந்த குப்தரின் பிதாரி தூண் கல்வெட்டு
- கத்வா பாறைக் கல்வெட்டு
- மதுபான் செப்புப் பட்டயம் (பஞ்சாப்)

- சோனாபட் செப்புப் பட்டயம்
- நாளந்தா களிமண் முத்திரைப் பொறிப்பு

**இலக்கியச் சான்றுகள்**

- விஷ்ணு, மத்சய, வாயு, பாகவத புராணங்கள், நாரதரின் நீதி சாஸ்திரம்.
- விசாகதத்தரின் தேவிச்சந்திர குப்தம், முத்ரா ராக்ஸம், பாணரின் ஹர்ஷ சரிதம்.
- காளிதாசரின் நாடகங்கள்
- இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த சீன பௌத்தத்துறவி பாகியானின் பயணக் குறிப்புகள்
- ஹர்ஷரின் ரத்னாவளி, நாகநந்தா, பிரியதர்ஷிகா
- யுவான் சுவாங்கின் சி– யூ –கி

## குப்த அரச வம்சம் நிறுவப்படல்

குப்த அரச வம்சத்தை நிறுவியவர் ஸ்ரீகுப்தர் எனக் கருதப்படுகிறார். அவர் தற்போதைய வங்காளம், பீகார் பகுதிகளை ஆண்டதாகக் கருதப்படுகிறது. நாணயங்களில் முதன்முதலாக இடம் பெற்ற குப்த அரசரின் வடிவம் இவருடையதே.இவருக்குப்பின்னர் இவருடைய மகன் கடோத்கஜர் அரசப் பதவியேற்றார். கல்வெட்டுகளில் இவர்கள் இருவருமே மகாராஜா என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**முதலாம் சந்திரகுப்தர்**
**(கி.பி. (பொ.ஆ) 319 – 335)**

முதலாம் சந்திரகுப்தர், புகழ்பெற்ற, வலிமை மிகுந்த 'லிச்சாவி' அரச குடும்பத்தைச் சேர்ந்த குமாரதேவியை மணந்தார். இக்குடும்பத்தின் ஆதரவோடு, வட இந்தியச் சிற்றரசுகள் பலவற்றை இவர் வெற்றிகொண்டு, ஒரு பேரரசின் முடியரசராகத் தன்னை முடி சூட்டிக்கொண்டார். சந்திரகுப்தரால் வெளியிடப்பட்டவை எனக் கருதப்படும் தங்க நாணயங்களில் சந்திரகுப்தர், குமாரதேவி ஆகிய இருவரின் உருவங்கள் இடம்பெற்றுள்ளன. 'லிச்சாவையா' என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

லிச்சாவி பழமையான கன சங்கங்களில் ஒன்றாகும். அதனுடைய ஆட்சிப் பகுதி கங்கை நதிக்கும் நேபாள நாட்டிற்கும் இடைப்பட்டதாக இருந்தது.

**சமுத்திரகுப்தர் (கி.பி. (பொ.ஆ) 335 – 380)**

முதலாம் சந்திரகுப்தரின் மகனான சமுத்திரகுப்தர் குப்த அரச வம்சத்தின் தலைசிறந்த அரசர் ஆவார். சமுத்திரகுப்தரின் அவைக்களப் புலவரான ஹரிசேனர் இயற்றிய பிரயாகை மெய்க்கீர்த்தி (பிரசஸ்தி) அலகாபாத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. சமுத்திரகுப்தரின் ஆட்சிக்கான மிக முக்கியச் சான்று அலகாபாத் தூண் கல்வெட்டாகும்.



அலகாபாத் தூண் கல்வெட்டு

**பிரசஸ்தி / மெய்க்கீர்த்தி:** பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப் 'புகழ்வதாகும்'. அவைக்களப் புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்துபாடி அவர்தம் சாதனைகளைப் பட்டியலிட்டனர். இவை பின்னர் மக்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்களில் பொறிக்கப்பட்டன.